**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 4**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I <u>சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.</u> **10 x 1 = 10**

1. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா
   இ) குலா ஈ) இலா
2. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
3. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
   அ) 105 ஆ) 155
   இ) 205 ஈ) 255
4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   அ) பரிபாடல் ஆ) முல்லைப் பாட்டு
   இ) நாலடியார் ஈ) மூதுரை
6. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு......................
   அ) 1978 ஆ) 1988
   இ) 1972 ஈ) 1982

7. குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார். ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
   ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
   ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

8. பால் என்பது ............... உட்பிரிவு ஆகும்.
   அ) திணையின் ஆ) திணையின்
   இ) காண்டத்தின் ஈ) படலத்தின்

9. உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின்............................
   அ) சிந்தனை ஆற்றல் ஆ) செல்வம்
   இ) வாழ்நாள் ஈ) ஆற்றல்

10.தற்காலத்தின்.....................என்று புகழப்படுபவர் ஸ்டீபன் ஹாக்கிங்.
   அ) விடிவெள்ளி ஆ) நம்பிக்கை மனிதன்
   இ) ஐன்ஸ்டைன் ஈ) அரிஸ்டாட்டில்

II <u>எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> **8 X 2 = 16**

11.மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

12.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

13."சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

14.வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**15.கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

**16.அகராதியில் காண்க.**

அ) கங்குல் ஆ) கனலி

**17.தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

**(சோறு, கற்றல், கரு, பூவில்)**

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன்............

2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை .................


**18.கலைச்சொல் அறிவோம்:**

அ) Infrared Rays – ஆ) Space Technology –

**19.கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

அ) இயற்கை - செயற்கை ஆ) கொடு - கோடு

**20.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21."மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

22.இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

23.நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், “இலச்சுமி கூப்பிடுகிறாள், போய் பார்” என்றார். ‘இதோ சென்றுவிட்டேன்” என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, “என்னடா விளையாட வேண்டுமா?” என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள், அவளிடம், “நீயும் இவனும் விளையாடுங்கள்” என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

இப்பத்தியிலுள்ள வழுக்களைத் திருத்தியும் வழுவமைதிகளைப் பட்டியலிட்டும் எழுது.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.தமிழர் மருத்துவமுறைக்கும், நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக.

25."அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக..

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' கட்டுரை எழுதுக.

27.ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பா டுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக..